BOOMI INTERNATIONAL RESEARCH JOURNAL OF TAMIL

E - ISSN: 3139 -1893

An international open access, peer- reviewed, refereed journal

# சீக்கராஜபுரம் ஆதியன் இன மக்களின் வாழ்வியல் சூழல்

# The Lifestyle and Living Conditions of the Adhiyan Community in Seekarajapuram

**த.மோனிஷா**

முனைவர் பட்ட ஆய்வாளர், தமிழ்த்துறை, திருவள்ளுவர் பல்கலைக்கழகம் சேர்க்காடு, வேலூர் - 632115

**முனைவர் நா. சிவகுரு**

இணைப்பேராசிரியர், தமிழ்த்துறை, திருவள்ளுவர் பல்கலைக்கழகம், சேர்க்காடு, வேலூர் – 632115

**T. Monisha**

Reseach Scholar, Department of Tamil, Thiruvalluvar University, serkkadu, Vellore – 632115.

Email Id: monishatamilmani95518@gmail.com. Orchid Id: https://orcid.org/0009-0008-6745-963X

**Dr. N. Sivaguru**

Associate Professor, Department of Tamil, Thiruvalluvar University, Serkkadu, Vellore – 632115.

Email Id: arasi162010@gmail.com. Orchid Id: https://orcid.org/0000-0001-9425-1078

**Abstract**

The Adhiyan community, commonly known as the Boom Boom Mattukaran people, is deeply connected to the culture of marginalized groups and the traditional folk arts of Tamils. In the Seekrajapuram area of Walajah Taluk within the Ranipet district, these community members live in tents set up under the Ponnai River bridge. This research article focuses on efforts to improve and uplift their living conditions and livelihood environments.

**Keywords:** Unsafe housing, lack of basic amenities, poverty, disease affliction.

**ஆய்வு சுருக்கம்**

தமிழர்களின் பாரம்பரிய நாட்டார் கலைகளுடன் விளிம்பு நிலை மக்களின் பண்பாடுடன் மிக நெருங்கி தொடர்புடையவர்கள் ஆதியன் என்று கருதப்படுகிற பூம்பூம் மாட்டுக்காரர்கள் இராணிப்பேட்டை மாவட்டம் வாலாஜா வட்டத்திற்கு உட்பட்ட சீக்கராஜபுரம் பகுதியில் பொன்னையாற்று பாலத்தின் அடியில் இச்சமூக மக்கள் கூடாரங்களை அமைத்து வாழ்ந்து வருகின்றனர். இவர்களின் வாழ்வியல் சூழலை மேம்படுத்தும் முயற்சியில் இக்கட்டுரையானது அமைந்துள்ளது.

**திறவுச்சொற்கள்** : பாதுகாப்பாற்ற வாழிடம், அடிப்படை வசதி, வறுமை, நோய் பாதிப்பு

## முன்னுரை

மனித குலம் இன்று பல்வேறு இனங்களாகவும் பல்லாயிரங்களுக்கும் மேற்பட்ட சமூகங்களாகவும் வேறுபட்டு காணப்படுகின்றது. ஆதியன் இனமாக கருதப்படுகிற பூம்பூம் மாட்டுக்காரர்கள் நாடோடி இனமான பழங்குடி மக்கள் தங்களுக்கு என்று தனிப்பட்ட நாகரிகம், தொன்மையான பழக்கவழக்கத்தை மேற்கொண்டு சவாலான இயற்கை சூழலில் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். சீக்கராஜபுரம் ஆதியன் இன மக்களின் வாழ்வியல் சூழலை ஆராய்வதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

## சீக்கராஜபுரம்

சீக்கராஜபுரம் தமிழ்நாட்டில் உள்ள இராணிப்பேட்டை மாவட்டத்தில் வாலாஜா தாலுக்காவில் அமைந்துள்ள ஒரு கிராமமாகும். இராணிப்பேட்டை வேலூர் மாவட்டத்தை இணைக்கும் பழைய பொன்னை ஆற்றின் பாலத்தின் அடியில் பூம்பூம் மாட்டுக்காரர்கள் என்று அழைக்கப்படுகின்ற ஆதியன் இன மக்கள் தங்கள் கூடாரங்களை அமைத்து பல ஆண்டுகளாக வாழ்ந்து வருகின்றனர்.



**சீக்கராஜபுரம்**

**பாதுகாப்பற்ற வாழிடம்**

ஆற்றுப்படுக்கைகளில் கிழிந்து போன துணிகளால் ஆன கூடாரங்களை அமைத்து சுமார் 50 ஆண்டுகளாக இப்பகுதியில் வாழ்ந்து வருவதாக தெரிவித்தனர். மழை காலங்களில் ஆற்று வெள்ள அபாயத்தால் அருகில் உள்ள பள்ளிக்கூடங்களில் வசிப்பதாகவும் தங்களின் உடைமைகளில் சில பொருட்களை மட்டும் தாங்கள் தங்குமிடங்களுக்கு எடுத்துச் செல்வதாகவும் கூறுகின்றன. கனமழை போது வெள்ள அபாயத்தால் தங்களின் பொருட்கள் பணம் மற்றும் மாடுகள் ஆடுகள் என அனைத்து பொருட்களும் வெள்ளத்தில் அடித்துச்செல்லப்பட்டதாகவும் கருதுகின்றனர்.



**அடிப்படை வசதியின்மை**

**"மின்சாரம் இருந்தால் கொண்டாட்டம்**

**மின்சாரம் இல்லையேல் திண்டாட்டம்"**

என்ற வாய்மொழி வரிகளுக்கு ஏற்ப இவர்கள் இருக்கும் இடங்களில் முறையான மின்சாரம் மற்றும் சுகாதாரமான கழிவறை வசதிகள் இவர்களுக்கு கிடைப்பதில்லை. இன்றைய நவீன உலகில் மின்சாரம் இல்லாதது மிக அவலமான நிலையை எடுத்துரைக்கிறது. இவர்கள் தங்களின் மொபைல் ஃபோன்களுக்கு சார்ஜ் போடுவதற்காக சாலைவீதிகளில் இருக்கும் கடைகளில் சின்ன பட்டன் போனுக்கு 5ரூபாயும் பெரிய டச் போனுக்கு 7 ரூபாய் கொடுத்து சார்ஜ் போடுகின்றனர். முதியோர்கள் குழந்தைகள் தாய்மார்கள் என அனைவரும் இரவு நேரத்தில் மின்சாரம் இல்லாமல் மிக அவதிக்குள்ளாகின்றனர். மேலும் கழிவறைகள் துணியால் போர்த்தப்பட்ட கழிவறையை பயன்படுத்துகின்றனர் இவர்களின் வாழ்வு இன்றும் இருள் சூழ்ந்த வாழ்வாக இருப்பது இன்றைய சமூகத்தில் அவல நிலையையும் சபிக்கப்பட்ட நாடோடி வாழ்க்கையும் எடுத்துரைக்கிறது.




**வறுமை**

*"இன்மையின் இன்னாதது யாதெனின் இன்மையின்*

*இன்மையே இன்னா தது."[1] (திருக்குறள். 1041)*

ஒரு மனிதனுக்கு வறுமை என்பது மிக மோசமான ஒரு கொடிய நோயாகும். பாரம்பரிய கலை நலிவடைந்ததால் இச்சமூகத்தினரிடம் வருமானம் மிக குறைவாக உள்ளது. இதனால் ஒரு நாளைக்கு ஒருவேளை உணவு மட்டுமே உண்ணும் நிலைக்கு பல குடும்பங்கள் தள்ளப்படுபட்டுள்ளனர்.

*"இனி ஒரு விதி செய்வோம் அதை*

*எந்நாளும் காப்போம்*

*தனி ஒருவனுக்கு உணவில்லை எனில்*

*இச்சகத்தினை அழித்து விடுவோம்"[2]*

*(பாரத சமுதாயம். 17)*

என்ற பாரதியாரின் கூற்றுப்படி இச்சமூகத்தில் நிலவும் வறுமை பசியை போக்குவது என்ற வரிகள் ஒரு மிகப்பெரிய ஒரு புரட்சி குரலாகும்.

*“இரந்தோருக்கு ஈவதும் உடையோர் கடனே”*[3]

*(வெற்றி வேட்கை. 58)*

ஒருவர் தனது தன்மானத்தை இழந்து பிறரிடம் கையேந்தும் நிலைக்கு வருகிறார் என்றால் அவரது வறுமை எவ்வளவு கொடுமையானது என்பதை மேற்கூறிய வரிகள் மூலம் நன்கு புரிந்து கொள்ளலாம். அத்தகைய ஏழைகளின் துயரத்தை கண்டு மனம் இறங்கி, செல்வம் உடையவர்கள் அவர்களுக்கு தம்மால் முயன்ற உதவிகளை செய்ய வேண்டும் பிறருக்கு உதவாத செல்வம் பயன்படாத **பனைமரத்தின் நிழலை** போன்றது.

**ஆதியன் மக்களிடையே ஊட்டச்சத்து குறைபாடு**

*“மாறுபாடு இல்லாத உண்டி மறுத்துண்ணின்*
*ஊறுபாடு இல்லை உயிர்க்கு”*[4]

*(திருக்குறள், 945)*


உடலின் ஆரோக்கியத்திற்கும் ஏற்றவாறு சத்துக்கள் நிறைந்த உணவை அளவறிந்து உண்ண வேண்டும். ஆனால் வறுமையின் காரணமாக அத்தகைய சத்தான உணவு கிடைக்காத போது மனித உயிருக்கும் உடலுக்கும் பெரும் பாதிப்புகள் ஏற்படுத்துகிறது. இதனால் பல்வேறு நோய்கள் உடலை பாதிக்கிறது. இதனால் பல்வேறு மக்களுக்கு ஊட்டச்சத்து குறைபாடு ஏற்படுகிறது.

**நோய் பாதிப்புகள்**

நாடோடி வாழ்க்கையால் இச்சமூக மக்கள் பல்வேறு இன்னல்களை சந்திக்க நேரிடுகிறது. சுகாதாரமின்மையும் மற்றும் வறுமை காரணமாகவும் பல்வேறு ஊட்டச்சத்து குறிப்பாக **வைட்டமின் பி12** குறைபாட்டினால் முதியோர்கள் கர்ப்பிணி பெண்கள், குழந்தைகள், ஆண்கள் என அனைவரும் இரத்த சோகையினால் மிக அதிகமாக பாதிக்கப்படுகின்றனர்.

- வயதான பெண்களுக்கு தொடர் சோர்வு
- தலைசுற்றல்
- மூச்சுத் திணறல் மற்றும் உடல் பலவீனம் ஏற்படுகின்றனர்.
- சிறு குழந்தைகளுக்கு தோல் சுருங்குதல் போன்ற புரதச்சத்து மற்றும் கலோரி குறைப்பாட்டு நோய் காணப்படுகிறது.
- வயதான பெண்கள் மற்றும் திருமணமான இளம் வயது பெண்களுக்கு **வைட்டமின் பி1** குறைபாட்டினால் இதய தசைகளை பலவினப்படுத்தி மாரடைப்புக்கு வழிவகுக்கிறது

கள ஆய்வின் மேற்கொண்டபோது ஆதியன் இன மக்களிடம் பெரும்பான்மையோருக்கு குறிப்பாக பெண்களுக்கு இதய பிரச்சினைகள் இருப்பது தெரிய வந்தது.



**கல்வி மற்றும் தொழில்**

*“கற்கை நன்றே கற்கை நன்றே*
*பிச்சை புகினும் கற்கை நன்றே”*[5]

*(வெற்றி வேட்கை. 35)*

மேற்கூறிய வரிகள் ஒருவன் ஏழ்மை நிலையில் அடைந்தாலும் பிச்சை எடுக்கும் நிலை ஏற்பட்டாலும் அந்நிலையிலும் அவன் கல்வி கற்க வேண்டும் என்பதை உணர்த்துகின்றன. இச்சமூக குழந்தைகளிடம் கல்வி பல்வேறு காரணங்கள் தடைபடுகிறது குறிப்பாக, பள்ளிக்கூடங்களில் சாதி சான்றிதழ் கேட்பதால் இக்குழந்தைகள் பள்ளிக்கு செல்ல விரும்புவதில்லை. சாதி சான்றிதழ் இல்லாததால் பல்வேறு இன்னல்களை சந்திக்க நேரிடுகிறது.

குறிப்பாக அரசு உதவி தொகை மற்றும் அரசாங்க வேலைகளின் முன்னிலை இதனை எல்லாம் ஆதியன் இன மக்கள் இழக்க நேரிடுகிறது. இதற்கான முதன்மை காரணம் அரசு தரும் சலுகைகளை பற்றி விழிப்புணர்வு இல்லாமையே ஆகும். இவர்களின் பெற்றோர் தங்கள் பிள்ளைகள் கல்வி கற்க வேண்டும் என்று விருப்பம் தெரிவித்தனர். நவீன உலகில் பூம்பூம் மாட்டை அலங்கரித்து வேடிக்கை காட்டுவதால் போதிய வருமானம் பெற முடியவில்லை. இருப்பினும் நாள்தோறும் வரும் தொகையில் 100 ரூபாய் மற்றும் 200 ரூபாய் வைத்தே தங்கள் குடும்பத்தை நடத்துகின்றன. இவர்கள் மாத சம்பளம் மற்றும் வார சம்பளத்தை பெறவில்லை நாடோறும் பெரும் பணத்தில் தங்களின் குடும்பத்தை நடத்துகின்றனர்.

**தீர்வுகள்**

ஆதியன் இன மக்களுக்கு நிலையான தங்குமிடம், இலவச வீட்டு மனை பட்டா வழங்கி இவர்களில் வாழ்வுக்கு ஒளி ஏற்ற வேண்டும். இலவச கழிவறை மற்றும் தங்குதடை இன்றி மின்சாரம் கிடைக்கவும் ஆவணங்களில் பெறுவதில் ஏற்படும் சிக்கல்களை தீர்த்து விழிப்புணர்வு மற்றும் ஆலோசனை வழங்க வேண்டும்.

தொழிலில் மிகவும் பின் தங்கியுள்ளதால் இவர்களுக்கான தொழில் முனைவுகளை அதாவது தொழில் சார்ந்த திறன் மேம்பாட்டு பயிற்சிகளை ஏற்படுத்தி தருதல் இவர்களை தங்களின் வாழ்வில் முன்னேற்ற ஒரு வழி வகையாகும். இவ்வாறாக பல்வேறு வகையான செயல்களை செய்வதன் மூலம் இவர்களின் சவாலான வாழ்வியல் சூழலை மேம்படுத்த முடியும். இவர்களின் வாழ்வாதாரத்தை உயர்த்த அரசு மற்றும் சமூக அமைப்புகள் ஒருங்கிணைந்து செயல்பட வேண்டும். ஆதியன் சமூகக் குழந்தைகளுக்குத் தரமான இலவசக் கல்வி, வேலைவாய்ப்பில் முன்னுரிமை, மற்றும் சுயதொழில் தொடங்குவதற்கான நிதியுதவி ஆகியவற்றை அரசு உறுதி செய்ய வேண்டும். இவர்களின் தனித்துவமான கலை வடிவங்கள் ஆவணப்படுத்தப்பட்டுப் பாதுகாக்கப்பட வேண்டும்

**முடிவுரை**

சீக்கராஜபுரம் பொன்னையாற்றின் படுக்கையில் வாழும் ஆதியன் இன மக்களின் பல்வேறு பிரச்சனைகளை தீர்ப்பது அரசு மட்டுமல்லாது நம் ஒவ்வொருவரையும் தலையாய கடமையாகும். இம்மக்களுக்குத் தேவையான கல்வி, பொருளாதார உரிமைகள் மற்றும் சமூக அங்கீகாரத்தை வழங்குவதன் மூலமே அவர்களின் வாழ்வியலை மேம்படுத்தி, உண்மையான சமூக சமத்துவத்தை நிலைநாட்ட முடியும். வருங்கால சந்ததியினராவது தற்போது உள்ள அவல நிலை நிலவாமல் அவர்களை தங்களின் முன்னேற்ற பாதையில் வழி வகுக்க நாம் முயற்சியை மேற்கொள்ள வேண்டும்.

**தகவலாளர்கள் - சீக்கராஜபுரம்**

1. கோவிந்தம்மாள்- 26
2. ரமேஷ் - 32
3. முனியம்மாள் - 57
4. கன்னியப்பன்- 72
5. கண்ணன் - 46
6. கன்னியம்மாள் - 40
7. விஜயலட்சுமி - 23
8. கன்னியப்பன் நாட்டாமைக்காரர் - 55
9. மீனா - 24
10. ஆனந்தன் - 30

**துணைநூற் பட்டியல்**

1. அதிவீரராம பாண்டியர், வெற்றிவேற்கை மூலமும் உரையும், ஸ்ரீ குமாரசாமி நாயுடு ஸன்ஸ், சென்னை, 1914,
2. நாமக்கல் கவிஞர் (உரை), திருக்குறள், சாரதா பதிப்பகம், சென்னை- 600014, மே 2004
3. பாரதியார் கவிதைகள், பூம்புகார் பதிப்பகம், சென்னை- 600108, 1991